கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## அவசரக் கூட்டம்

## நாள் : 03.05.2018

# 03.05.2018ம் தேதிய நகர்மன்ற அவசரக்கூட்ட பொருள்கள்

| வ.எண் | பொருள்கள் – ஏப்ரல் 2018 | தீர்மானம் எண் |
|---|---|---|
| 1 | கும்பகோணம் நகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்திட மத்திய அரசு, மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன், அட்டல் நகர்ப்புர புத்துணர்வு மற்றும் நகர்ப்புர மாற்றத்திற்கான (AMRUT) திட்டம் 2016–17–ன் கீழ் ரூ.59 கோடியே 84 இலட்சம் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (MC2) துறை அரசாணை எண்.111 நாள் 25.10.2017–ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.21**<br>அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| Sl. No. | Name of the work | Project Cost | Funding Pattern (Rs. in crore) | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | GOI Share 50% | GOTN Share 20% | ULB share under | |
| | | | | | Own Fund | ADB/ TUFIDCO/ TNUIFSL LOAN |
| 1. | Providing UGSS to left out areas in Kumbakonam Municipality. | 59.84 | 29.92 | 11.97 | 5.98 | 11.97 |

இத்திட்டப் பணிக்கு விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டதில், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் அவர்களின் 13.11.2017–ம் தேதிய செயல்முறை உத்தரவு ந.க.எண் 18281/2017/DO1 –ல் 2017–18–ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட விலைப்பட்டியல்படி ரூ.59.84 கோடிக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 20.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு நிறுவனங்களிடமிருந்து கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்தப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் (%) |
|---|---|---|---|---|
| 1 | M/s.Keyem Engineering Enterprises, New No.22 (Old No.38), IIIrd East Street, Kamaraj Nagar, Thiruvanmiyur, Chennai 600 041. | 58,37,19,054 | 77,36,40,000.05 | மதிப்பீட்டை விட **32.54** % கூடுதல் |
| 2 | M/s. Anchar Ceramic Co (P) Ltd., 15/11, Kadambadi Amman Koil Street, Valasaravakkam, Chennai.87. | 58,37,19,054 | 80,47,51,050.28 | மதிப்பீட்டை விட **37.27%** கூடுதல் |

மதிப்பீட்டினைவிட 32.54 % கூடுதலாக ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதால் இப்பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இத்திட்டப் பணியினை உடன் முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்ற காரணத்தினால், வரப்பெற்றதில் குறைவானதும், மதிப்பீட்டினை விட 32.54 % கூடுதலாகவும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள சென்னை, Keyem Engineering Enterprises நிறுவனத்தாரிடம் இவ்வலுவலக ந.க.எண்.8303/2017/இ2 நாள் 22.1.2018 , 24.1.2018, 19.2.2018, 6.3.2018, & 6.4.2018 ஆகிய தேதிகளிடப்பட்ட கடிதங்களில் விலைக்குறைப்பு சம்மத கடிதம் கோரப்பட்டு சென்னை, Keyem Engineering Enterprises நிறுவனத்தாரிடமிருந்து கீழ்க்கண்ட விபரப்படி விலை குறைப்பு செய்து கடிதம் பெறப்பட்டது.

| விலைக்குறைப்பு கடித விபரம் | விலைக்குறைப்பு சம்மத கடிதத்திற்கு பின்னர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் (%) |
|---|---|---|
| முதலாவது விலைக்குறைப்பு கடிதம் நாள்22.1.2018 | 75,72,51,264.06 | மதிப்பீட்டை விட 29.73% கூடுதல் |
| இரண்டாவது விலைக்குறைப்பு கடிதம் நாள்30.1.2018 | 73,92,26,880.00 | மதிப்பீட்டை விட 26.64% கூடுதல் |
| மூன்றாவது விலைக்குறைப்பு கடிதம் நாள்26.2.2018 | 73,11,62,880.00 | மதிப்பீட்டை விட 25.26% கூடுதல் |
| நான்காவது விலைக்குறைப்பு கடிதம் நாள்6.4.2018 | 69,98,54,400.00 | மதிப்பீட்டை விட 19.89% கூடுதல் |
| ஐந்தாவது விலைக்குறைப்பு கடிதம் நாள்13.4.2018 | 64,14,91,200.00 | மதிப்பீட்டை விட 9.90% கூடுதல் |

ஐந்தாவது விலைக்குறைப்பு கடிதத்தின்படி ஒப்பந்தப்புள்ளித் தொகை PWD and TWAD 2017–18ம் ஆண்டு தரப்படுத்தப்பட்ட பட்டியல்படி மதிப்பீட்டைவிட 9.90% கூடுதலாக இருந்தாலும், Prevailing local rates for Sand, Mason Class I & II and Mazdoor Class I and II விலை விகிதத்தினை ஒப்பிடும்பொழுது 3% கூடுதலாக மட்டுமே வருவதாலும், வரும் நிதியாண்டில் தளவாட பொருட்கள் மற்றும் பணியாட்கள் கூலி மேலும் கூடுதலாகும் என்பதாலும் சென்னை, Keyem Engineering Enterprises நிறுவனத்தாரின் ஐந்தாவது விலைக்குறைப்பு சம்மதக்கடிதத்திற்கு பின்னர் மதிப்பீட்டு விலைவிகிதத்தினை விட 9.90 % கூடுதலான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக Tender Award Committee தனது 30.04.2018ம் தேதிய கூட்டத்தில் பரிந்துரை செய்துள்ளது.

திட்ட ஒதுக்கீட்டு தொகை ரூ.59.84 கோடியினைவிட கூடுதலாகும் தொகையினை முழு மானியமாக நகராட்சிக்கு வழங்க அரசினை கோரவும், மேற்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

2 இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு வாகனங்கள், பொருள் பாதுகாப்பு கிடங்கு (மாட்டுக் கொட்டகை) வளாகத்தில், பாதுகாப்பு பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.215, நாள்.29.08.2013ல் அனுமதி பெறப்பட்டு, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகம் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி கழகத்தார் முறையாக பணிமேற்கொள்ளாத காரணத்தால், நகர்மன்ற அனுமதி பெறப்பட்டு, விலைப்புள்ளி கோரியதில் குறைந்த விலைவிகிதம் கொடுத்த மதுரை மீனாட்சி சாலிட்வேஸ்ட் கிளியரிங் ஏஜென்சி, காரைக்குடி நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி

**தீர்மான எண்.22**
அலுவலககுறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| | அலுவலக வளாகத்தில் காவலர் பணிக்கு ஆட்கள் இல்லாத காரணத்தால் நகர்மன்ற தீர்மான எண்.113 நாள்.24.02.2017ல் அனுமதி பெறப்பட்டு மதுரை மீனாட்சி சாலிட்வேஸ்ட் கிளியரிங் ஏஜென்சி, காரைக்குடி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரண்டு பணிகளுக்கும் மொத்தம்–6 பணியாளர்கள் (மாட்டுக்கொட்டகை–2, உரக்கிடங்கு–2, அலுவலக வளாகம்–2) ஒரு நபர் 12 மணிநேரம் பணி பார்த்து வருகின்றனர். மாதம் ஒன்றிற்கு நபர் ஒருவருக்கு ரூ.10,800/– வீதம் ஊதியம் வழங்க நகர்மனற் தீர்மான எண்.1911, நாள்.31.08.2016ல் அனுமதி பெறப்பட்டு மெஸர்ஸ் மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரிங் ஏஜென்சி, காரைக்குடி நிறுவனத்தார் மூலம் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.1911, நாள்.31.08.2016ல் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு ரூ.10,800/– வீதத்தில் தொடர்ந்து பணி செய்ய மதுரை மீனாட்சி சாலிட் வேஸ்ட் கிளியரிங் ஏஜென்சி, காரைக்குடி நிறுவனத்தார் சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே இப்பணியினை பழைய விலை விகிதத்திலேயே தொடர்ந்து 30.04.2019 வரை பணி மேற்கொள்ள அனுமதிப்பது தொடர்பாக மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | |
| 3 | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது 28.03.2018 ஆம் தேதிய ந.க.எண்.7234/14/ஆர்1 எண்ணிட்ட கடிதத்தின்படி இந்நகராட்சிக்குட்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்ய தினசரி நாளிதழில் தஞ்சாவூர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் வழியாக பிரசுரம் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.12,000/– மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.23** அனுமதி அளிக்கப்பட்டது. |
| 4 | இந்நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு 2018–19ம் ஆண்டிற்கான வாகன வரி FC எடுத்தல் மற்றும் காப்பீட்டுத் தொகை உத்தேசமான செலவினம் ரூ.10,00,000/–க்கு (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.24** அனுமதி வழங்கப்பட்டது. |

| **வ.எண்** | **வாகன எண்** | **வாகன வகை** |
|---|---|---|
| 1. | TN.49 AX 2929 | பொலிரோ |
| 2. | TN.49 AX 2923 | பொலிரோ |
| 3. | TN.49 AX 2908 | பொலிரோ |
| 4. | TN.49 5754 | ஹைட்ராலிக் லேடர் |
| 5. | TN.68 Q 1116 | ஸ்கார்பியோ |
| 6. | TN.49 U 2266 | ஹைட்ராலிக் லேடர் |
| 7. | TN.49 4385 | குடிநீர் குழாய் இணைப்பில் பழுது கண்டறியும் வாகனம் |
| 8. | TN.49 A 1294 | காம்போ லாரி |
| 9. | TN.49 A 8490 | டிசில்டிங் மெசீன் |

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சிறப்புக் கூட்டம்

## நாள் : 11.05.2018

# 11.05.2018ம் தேதிய நகர்மன்ற சிறப்புக்கூட்ட பொருள்கள்

| வ.எண் | பொருள்கள் – மே 2018 | தீர்மானம் எண் |
|---|---|---|
| 1 | கும்பகோணம் நகரம், வார்டு எண்.6, பிளாக் எண்.13, நகரளவு எண்.804/2, 805, 806ல் நகராட்சிக்கு சொந்தமான 2491 ச.மீட்டர் (26803 ச.அடி) பரப்பளவில் உள்ள இடத்தில் 1066.41 ச.மீட்டர் (11475ச.அடி) அளவில் கட்டிடத்தில் நகராட்சி மீன் மார்க்கெட் இயங்கி வந்தது. மொத்த இடத்தில் கட்டிடம் போக முன்புறம் உள்ள காலியிடம் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் வாகனங்கள் நிறுத்துமிடமாக 886.29 ச.மீ (9536 ச.அடி) பயன்பாட்டில் இருந்து வந்தது. தற்பொழுது மீன்மார்க்கெட் வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு கட்டிடம் பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. கட்டிடத்தின் முன்புறம் உள்ள மேற்கண்ட காலியிடத்தினை திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் லிட்., இசட் 322, நெ.55 சன்னதி தெரு, திருபுவனம் என்ற முகவரியில் இயங்கிவரும் துணை இயக்குநர் / மேலாண்மை இயக்குநர் அவர்கள் 14.02.2018ந் தேதிய கடித ந.க.எண்.1670/2018/டி1ல் திருச்சி கைத்தறி பெருங்குழுமத்தின் மூலம் மத்திய அரசு மூலம் 480 இலட்சம் மற்றும் மாநில அரசு / பயனாளிகள் / பங்குதாரர் மூலம் ரூ.120லட்சமும் மொத்த திட்ட தொகை ரூ.600 லட்சத்தில் வணிக வளாகம் அமைக்க தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக்கழகம் சென்னை மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் மேற்கண்ட மீன்மார்க்கெட் பகுதியின் மீதியுள்ள காலிஇடத்தின் முன்பகுதியின் அகலம் சுமார் 60 அடி கொண்டதாகவும் உள்ளதை நீண்டகால குத்தகைக்கு வழங்கக் கோரியிருந்ததன் பேரில் நகர் மன்ற தீர்மானம் எண் 392 நாள் 28.02.2018ல் 5736 சதுரடி இடத்தினை அரசின் அனுமதி பெற்று குத்தகைக்கு விட அனுமதி அளித்துள்ளது. அதனைத் தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு ந.க. எண் 1670/2018/டி1, நாள் 09.03.2018ல் கருத்துரு அனுப்பப்பட்டது. தற்பொழுது திருபுவனம் பட்டு கூட்டுறவு சங்க மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதம் நாள் 26.04.2018ல் கும்பகோணம் நகராட்சிக்குட்பட்ட பழைய மீன் மார்க்கெட் இயங்கிவந்த இடத்தில் நீண்டகால குத்தகைக்கு கோரப்பட்ட இடம் தேவையான அளவை விட குறைவாக இருப்பதால் அதற்கு பதிலாக புதிய பேருந்து நிலையம் அருகில் காலியாக உள்ள நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 6, பிளாக் எண் 13, நகரளவு எண் 800ல் சுமார் 9000 ச.அடி இடம் ஒதுக்கி 30 வருடத்திற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்க கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட இடம் ஆணையர், கும்பகோணம் நகராட்சி என நகர அளவு ஆவணங்களில் பதிவாகி உள்ளது. மேற்படி வார்டு எண் 6, பிளாக் எண் 13, நகரளவு எண் 800ல் உள்ள 9000 சதுரடி காலியிடத்தினை நீண்டகால குத்தகைக்கு திருபுவனம் கூட்டுறவு பட்டு சொசைட்டிக்கு வழங்க அரசு ஆணை எண்.730 RDLA Dept/ நாள்.**14.04.1976**ன்படி அரசு செயலர் அவர்களின் அனுமதி பெற அரசுக்கு உரிய கருத்துரு அனுப்ப மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.25**<br>அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**

கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 31.05.2018

# <u>25.05.2018ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்</u>

| வ.எண் | பொருள்கள் – மே 2018 | தீர்மானம் எண் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் பயன்பாட்டில் உள்ள AIRTEL CUG-2 இணைப்புகளுக்கு மாதாந்திர தொகை செலுத்துவதற்கு 2018–2019ம் ஆண்டுக்கு உத்தேச செலவினமாக ரூ.15,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.26** அனுமதி வழங்கப்பட்டது. |
| 2. | இந்நகராட்சியில் பணியாளர்களின் அன்றாட வருகை பதிவினை DIO METRIC DEVICE மூலம் பதிவு செய்திட அதற்கான DATA சிம் 8 எண்ணிக்கை ஏர்டெல் நிறுவனத்திடமிருந்து பெற்று பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி நிறுவனத்திற்கான தொகை வழங்க 2018–19ம் ஆண்டு உத்தேச செலவினமாக ரூ.25,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.27** அனுமதி வழங்கப்பட்டது. |
| 3. | இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் மிக அதிக அளவில் பழுதடைந்த 495 எண்ணிக்கை பிறப்பு இறப்பு பதிவேடுகளை பைண்டிங் நல்லமுறையில் வைக்க வேண்டி உள்ளது. அலுவலகத்திலேயே மேற்படி பதிவேடுகளை பைண்டிங் செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.25,600/–க்கு மன்ற அனுமதி வழங்க பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.28** அனுமதி வழங்கப்பட்டது. |
| 4. | இந்நகராட்சியில் இயங்கிவரும் அம்மா உணவகத்தில் உள்ள தளவாடப் பொருட்கள் பழுதடைந்துள்ளதால், அதனை சீர்செய்வதற்கும், விலைப்புள்ளி கோருவதற்கும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண்.29** அனுமதி வழங்கப்பட்டது. |
| 5. | இந்நகராட்சி 45 வார்டுகளில் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ள இனங்களுக்கும் புதை சாக்கடை இணைப்பு கொடுக்கப்பட்டதற்கு முன்பே கேட்பு எழுப்பப்பட்டதால் இதனை நீக்கம் செய்யக்கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் தள ஆய்வு செய்யப்பட்டது. இதனால் தவறாக எழுப்பப்பட்ட கேட்புத்தொகை ரூ.28,125 நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்.30** அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. |

| வ. எண் | வார்டு எண் | வரிவிதிப்பு எண் | பெயர் | தெருவின் பெயர் | காலம் | தொகை ரூ | தள்ளுபடி செய்வதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 30 | 105/ 27713 | கே.ஆர்.முருகன் | 84 காந்தியடிகள் சாலை | 2013-14- II to 2014-15- I | 750 | புதைசாக்கடை இணைப்பானது 22.07.2015ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 2 | 38 | 105/ 35324 | எ.செல்வராஜ் | 20 நேரு காலனி | 2010-11- II to 2010-11- III | 300 | புதைசாக்கடை இணைப்பானது 18.02.2011ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 3 | 22 | 105/ 20408 | ஆர்.செந்தில் குமார் | 25-1/474 டாக்டர் பெசண்ட் ரோடு, | 2009-10- II to 2013-14- IV | 4125 | புதைசாக்கடை இணைப்பானது 20.04.2015ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 4 | 03 | 105/ 2090 | எம்.ஐ.பீபிஜான் | 23பி/10 24 முதலி தெரு, | 2013-14- II to 2016-17- II | 2775 | புதைசாக்கடை இணைப்பானது 13.10.2017ல் தான் |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 5 | 06 | 105/ 4230 | ஏஸ்.சொக்கலிங்கம் | 32பி/24 33 சோழன் நகர், | 2009-10- II to 2013-14- I | 3450 | புதைசாக்கடை இணைப்பானது 13.08.2014ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 6 | 05 | 105/ 3424 | டி.நஜமுன்னிஸா பேகம் | 22/1364 வைக்கோல் கட்டுக்காரத் தெரு | 2009-10- II to 2014-15- II | 4575 | புதைசாக்கடை இணைப்பானது 07.10.2015ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 7 | 16 | 105/ 14310 | என்.சுவாமிநாதன் | 35/1048 முக்கண்ணர் தெரு | 2009-10- II to 2012-13- IV | 3225 | புதைசாக்கடை இணைப்பானது 09.05.2013ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 8 | 16 | 105/ 301 | மல்லிகா | 4/667 மூப்பக்கோவில் தெற்கு தெரு | 2009-10- II to 2017-18- III | 7500 | புதைசாக்கடை இணைப்பானது 05.02.2018ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 9 | 06 | 105/ 4312 | சுந்தரேசன் | 11பி/22 79 /2 பெருமாண்டி மெயின் ரோடு(பார்ட்) தெரு | 2013-14- II to 2017-18- III | 1425 | புதைசாக்கடை இணைப்பானது 05.02.2018ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 9 | 04 | 105/ 2774 | மாதவன் | 1134 செக்கடி தெரு (ரகோஜி தெரு) | 2009-10- II to 2011-12- III | 2100 | புதைசாக்கடை இணைப்பானது 12.01.2012ல் தான் வழங்கப்பட்டுள்ளது அதற்கு முந்தைய வரியினை ரத்து செய்யலாம். |
| 10 | 07 | 105/ 5951 | டி.தேன்மொழி | 46-5-3 சுப்பிரமணியபுரம் டாக்டர் மூர்த்தி ரோடு, | வ.விதி.எண்.**5100**யினை ரத்து செய்யவும் **5951/105**ல் கேட்பை எழுப்பவும். | | |

| | | |
|---|---|---|
| 6. | இந்நகராட்சி வார்டு எண் 7, பாலக்கரை சித்தி விநாயகர் கோவில் அருகில் காவிரி ஆற்றின் கரையோரம் காவிரி ஆறு மாசுபடும் விதத்தில் எவ்வித கழிவு | **தீர்மான எண்.31** அனுமதி |

<table>
<tr><td></td><td>நீறும் ஆற்றில் சேரா வண்ணம் பொது கழிவறை அமைத்து பராமரித்துக் கொள்ள கும்பகோணம் காவிரி வடிநில உபகோட்டம், பொ.ப.து. உதவி செயற்பொறியாளர் அவர்களின் கடிதம் எண்.44/2018/கோ.32 நாள் 9.3.2018–ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. வருவாய் நிதியின் கீழ் வார்டு எண் 7, பாலக்கரை சித்தி விநாயகர் கோவில் அருகில் காவிரி ஆற்றின் கரையோரம் புதியதாக பொது கழிவறை கட்டும் பணிக்கு ரூ.14.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதிக்கு.</td><td>அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>7.</td><td>இந்நகராட்சி பயோ–மெத்தனேசன் உள்ள 3hp submerciable Motor pumpsetஐ பழுது சீர் செய்யும்பணிக்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பிட்டு தொகை ரூ.8800/– ஆகும். மேற்கண்ட பணிக்கு 05.04.2018ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>குறைவு / அதிகம்</th></tr>
<tr><td>1.</td><td>M/s. Raju Electricals<br>Kumbakonam</td><td>-0.22% குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>M/s. Five Star Electrical Engg works<br>Kumbakonam</td><td>+3.52% அதிகம்</td></tr>
<tr><td>3.</td><td>M/s. Ramu General Engineering works<br>Kumbakonam</td><td>+0.56% அதிகம்</td></tr>
</table></td><td>தீர்மான எண்.32<br>அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td>8.</td><td>கும்பகோணம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மைத்திட்டம் நகர்பகுதியில் பொதுமக்களிடமிருந்து குப்பைகளை தனித்தனியே பிரித்து வாங்கும் பொருட்டு, நீலம் மற்றும் பச்சை நிறத்தில் இரண்டு குப்பை கூடைகள் ஸ்டாண்டுடன் கூடிய அமைப்பு வாங்கும் பொருட்டு நகர்மன்ற அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>திருமலை டிரேடர்ஸ்,<br>FF–3, ரெங்கா காம்ளக்ஸ், ரம்பா தியேட்டர் அருகில். திருச்சி 620 002</td><td>7600/–</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீஅக்ஷயா டிரேடர்ஸ்<br>13/31, உறையூர், திருச்சி 620 003</td><td>9600/–</td></tr>
<tr><td>3.</td><td>சாமி எண்டர்பிரைசஸ்<br>8/66, தெற்கு தெரு, பூதங்குடி, சேத்தியாதோப்பு. கடலூர் 608 702</td><td>10100/–</td></tr>
</table></td><td>தீர்மான எண்.33<br>அனுமதி அளிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>9.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான கையுறை வாங்கும் பொருட்டு நகர்மன்ற அனுமதி பெறப்பட்டு, விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றது. மன்றத்தின் முடிவுக்காக பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>ஸ்ரீஅக்ஷயா டிரேடர்ஸ்<br>13/31, உறையூர், திருச்சி 620 003</td><td>140/–</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீஅம்மன் ஏஜென்சி,<br>1/3856/1 கோகுலம் காலனி.<br>எண்.1 டோல்கேட், திருச்சி.621 216</td><td>165/–</td></tr>
<tr><td>3.</td><td>திருமலை டிரேடர்ஸ்,<br>FF–3, ரெங்கா காம்ளக்ஸ்,<br>ரம்பா தியேட்டர் அருகில். திருச்சி 620 002</td><td>170/–</td></tr>
</table></td><td>தீர்மான எண்.34<br>அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
<tr><td>10.</td><td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மக்கும் குப்பை மக்காத குப்பைகள் 100% தரம் பிரித்து வாங்கும் பணி மேற்கொள்ள பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு சுற்றுச்சூழல் பாதுகாவலர் சான்று வழங்கும் பொருட்டு சான்று 500 எண்ணிக்கை அச்சடிக்க</td><td>தீர்மான எண்.35<br>அலுவலககுறிப்பு ஏற்கப்பட்டது.</td></tr>
</table>

விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | விஜயலெட்சுமி கலர் அண்ட் டிஜிட்டல் பிரிண்டர்ஸ் 1, பீமன் தெரு, கும்பகோணம் | 5500/– |
| 2. | தனலெட்சுமி ஆப்செட் பிரிண்டர்ஸ் 43, ஆயிகுளம் ரோடு, கும்பகோணம் | 5600/– |
| 3. | நாடார் பிரஸ் 48, நாகேஸ்வரன் தெற்குவீதி கும்பகோணம் | 5200/– |

11. கீழ்க்கண்ட நாளிதழ்களில் தமிழக அரசின் ஓராண்டு சாதனை மலர் வெளியிடப்பட்டதில் இந்நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த அறிக்கையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க. எண் 515/2018/இ1, நாள் 07.03.2018 மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க. எண் 10/செ.ம.தொ.அ./2018/நாள் 08.03.2018 ஆகிய கடிதங்களுக்கிணங்க கீழ்க்கண்ட விபரப்படி விளம்பரம் செய்தமைக்கும், அதற்காகும் செலவினத்திற்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மான எண்.36**
ஒப்புதல் வழங்கப்பட்டது.

| வரிசை எண். | நாளிதழ் விபரம் | விளம்பரம் வெளிவந்த நாள் | பட்டியல் எண் | தொகை |
|---|---|---|---|---|
| 1. | தினமலர் | 29.03.2018 | பட்டியல் எண். 123 நாள் 29.3.2018 | ரூ.25,515/– |
| 2. | தினத்தந்தி | 24.3.2018 | பட்டியல் எண். TNJ1718-0012952 நாள் 24.3.2018 | ரூ.20903/– |

12. இந்நகராட்சி வார்டு எண் 27 கக்கன் காலனியில் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள பழைய பொதுக் கழிவறைக் கட்டிடத்தினை தரைமட்டம் வரையில் இடித்து அப்புறப்படுத்த 27.03.2018 அன்று பொது ஏலத்தில் விடப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ரூ.9500/–க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு.என்.சரவணன், 10ஏ, ஆண்டியப்பன் தெரு, கும்பகோணம் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**தீர்மான எண்.37**
அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| வ. எண் | ஏலதாரர் பெயர் | ஏலக்கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு.என். சரவணன், 10ஏ, ஆண்டியப்பன் தெரு, கும்பகோணம். | 9500/– |
| 2 | எஸ். குணசேகரன், செக்கான்கன்னி, கும்பகோணம் | 9400/– |
| 3 | அய்யப்பன், 33 இ, பத்தடி பாலம், கம்பன் நகர், கும்பகோணம். | 9300/– |
| 4 | எம்.எல்.ஆர். சேகர், தெற்கு வீதி, திருபுவனம் | 9150/– |

13. இந்நகராட்சி வார்டு எண் 26 ஜான் செல்வராஜ் நகரில் உள்ள நகராட்சி பள்ளியில் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ள பழைய கட்டிடத்தினை தரைமட்டம் வரையில் இடித்து அப்புறப்படுத்த 14.03.2018 அன்று பொது ஏலத்தில் விடப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ரூ.9500/–க்கு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி

**தீர்மான எண்.38**
அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

<table>
<tr><td></td><td>கேட்டுள்ள திரு.கே.என்.ஆர். சேகர், ஏ/51 ஹவுசிங் யூனிட் அண்ணலக்ரஹாரம் என்பவரின் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வியினை ஏற்க மன்றத்தின் ஒப்புதலுக்கு.
<table>
<tr><th>வ. எ ண்</th><th>ஏலதாரர் பெயர்</th><th>ஏலக் கேள்வித் தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திரு.கே.என்.ஆர். சேகர்,<br>ஏ/51 ஹவுசிங் யூனிட் அண்ணலக்ரஹாரம்</td><td>9500/–</td></tr>
<tr><td>2</td><td>எம். இலங்கேஸ்வரன்,<br>14 கோடீஸ்வரன் வடக்கு வீதி,<br>மேலக்காவேரி, கும்பகோணம்.</td><td>9400/–</td></tr>
<tr><td>3</td><td>எம். மதன்,<br>7, ஸ்ரீ நாராயணன் நகர், வலையப்பேட்டை,<br>தாராசுரம்</td><td>9300/–</td></tr>
<tr><td>4</td><td>இ. தளபதி,<br>வடக்கு மட விளாகம், திருநாகேஸ்வரம்</td><td>9200/–</td></tr>
</table></td><td></td></tr>
<tr><td>14.</td><td>இந்நகராட்சி வார்டு எண்.29 நாகேஸ்வரன் தெற்கு மற்றும் மேற்கு தெரு சந்திப்பில் புதிதாக ஆர்.சி.சி சிறுபாலம் அமைக்கும் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டிலான பணிக்கு முதல் அழைப்பாக 18.04.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட விபரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ.</th><th>ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீத விபரம் ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திரு.என்.சரவ ணன்<br>கும்பகோணம்</td><td>444141.40</td><td>444067.65</td><td>மதிப்பீட்டை விட 0.02 சதவிகிதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>A.B.Builders<br>கும்பகோணம்</td><td>444141.40</td><td>467237.11</td><td>மதிப்பீட்டை விட 5.92 சதவிகிதம் அதிகம்</td></tr>
</table></td><td>தீர்மான எண்.39<br>அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>15.</td><td>இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள பிரிண்டர்களுக்கு பயன்படுத்தப்படும் டோனர்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப வாங்கிக் கொள்ள உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றம் தனது 28.02.2018ம் தேதிய தீர்மானம் எண்.395ல் அனுமதி வழங்கியதன்பேரில் இப்பணிக்கு 04.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ.</th><th>ஒப்பந்தாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.</th><th>சதவீத விபரம் ரூ.</th></tr>
<tr><td>1</td><td>V.R.Computers<br>F2 & F3 First Floor,<br>MIM Complex<br>New Bus Stand,<br>Kumbakonam</td><td>96170</td><td>96150</td><td>மதிப்பீட்டை விட 0.02 சதவிகிதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>G.S Communication<br>F6, MIM Complex,</td><td>96170</td><td>101100</td><td>மதிப்பீட்டை விட 5.13</td></tr>
</table></td><td>தீர்மான எண்.40<br>அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 60 Feet road New Bus stand, Kumbakonam | | | சதவிகிதம் அதிகம் | |

16. இந்நகராட்சி எல்லைக்குள் இயற்கை இடர்பாடுகள், குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டப் பராமரிப்பு பணிகளால் பாதிக்கப்பட்ட சாலைப் பகுதிகளில் பேட்ஜ் ஒர்க் செய்யும் பணிக்கு ரூ.33.00 இலட்சத்திற்கு நகர் மன்றம் தனது 27.10.2017ம் தேதிய தீர்மானம் எண் 305ல் அனுமதி வழங்கியதன் பேரில், இப்பணிக்கு முதல் அழைப்பாக 04.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

**தீர்மான எண்.41**
அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. (GST இல்லாமல்) | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திரு.என். சரவணன், 10ஏ ஆண்டியப்பர் தெரு, கும்பகோணம். | 3265891 | 3427502.00 | மதிப்பீட்டை விட 4.95 சதவிகிதம் அதிகம் |
| 2 | ஐடியல் இன்ஜினியரிங், எழில் நகர், தேப்பெருமாநர்லூர் ரோடு, அம்மாசத்திரம்–612 103 | 3265891 | 3502680.00 | மதிப்பீட்டை விட 7.25 சதவிகிதம் அதிகம் |
| 3 | திரு.எம்.இராஜேந்திரன், பிளாட் நெ.233, அன்னை அஞ்சுகம் நகர், செட்டிமண்டபம், கும்பகோணம். | 3265891 | 3575947.00 | மதிப்பீட்டை விட 9.49 சதவிகிதம் அதிகம் |
| 4 | திரு.கே. மணிக்கண்ணன், 1/15 வடக்கு தெரு, நடுவக்கரை, உமாமகேஸ்வரபுரம் போஸ்ட், கும்பகோணம். | 3265891 | 3668168.00 | மதிப்பீட்டை விட 12.32 சதவிகிதம் அதிகம் |

17. கும்பகோணம் நகராட்சியில் 1.10.2013 முதல் கீழ்க்காணும் விபரப்படி தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

**தீர்மான எண்.42**
அனுமதி வழங்கப்பட்டது.

| **வ. எண்** | **சராசரி அரையாண்டு வருமானம் ரூ.** | **1.10.2013 முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொழில்வரி ரூ.** |
|---|---|---|
| 1 | ரூ.21000/– வரை | இல்லை |
| 2 | ரூ.21001/– முதல் 30000/– வரை | 140/– |
| 3 | ரூ.30001/– முதல் 45000/– வரை | 340/– |
| 4 | ரூ.45001/– முதல் 60000/– வரை | 660/– |
| 5 | ரூ.60001/– முதல் 75000/– வரை | 990/– |
| 6 | ரூ.75001/– க்கு மேல் | 1250/– |

| | | | |
|---|---|---|---|
| | நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.12503/2018/ஆர்1 நாள்.21.5.2018ல் அறிவுறுத்தியவாறும் 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாநகராட்சி சட்டம் பிரிவு 124Dன்படியும் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நகர்மன்றத்தால் தொழில்வரி சீராய்வு செய்யப்பட்டு ஏற்கனவே நடைமுறையில் உள்ள வரிவிகிதத்தில் 25 சதவீதத்திற்கு குறையாமலும், 35 சதவீதத்திற்கு மிகாமலும் உயர்வு செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தொழில்வரியை 1.10.2018 முதல் வரி சீராய்வு செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.<br><br>(அட்டவணை கீழே)<br><br>மேற்கண்டவாறு 1.10.2018 முதல் தொழில்வரியை 35 சதவீதம் உயர்வு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு. | |
| 18. | இந்நகராட்சியில் தற்பொழுது நடைமுறையில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டத்தில் 7 பம்பிங் ஸ்டேஷன்கள், 3 லிப்டிட்ங ஸ்டேஷன், 125 கி.மீ. நீளத்திற்கு Sewerage Line , 25 கி.மீ. நீளத்திற்கு முதன்மை கழிவு நீர் உந்து குழாய் மற்றும் 5539 ஆள் இறங்கும் தொட்டிகள் ஆகியவை பயன்பாட்டில் உள்ளன. இத்திட்டத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு ஒரு Jet Roding இயந்திரம் மட்டும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது 19291 எண்ணிக்கையிலான வீட்டிணைப்புகள் பயன்பாட்டடில் உள்ளன. இதில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 20 எண்ணிக்கையிலான புகார்கள் சரி செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கு தற்போது பயன்பாட்டில் உள்ள ஒரு Jet Roding இயந்திரம் மட்டும் போதுமானதாக இல்லை. எனவே 6000 லிட்டர் கொள்ளவு கொண்ட Jet Roding Vehicle வாகனம் மற்றும் சுகாதார சந்துகளில் உள்ள ஆள் இறங்கும் தொட்டிகளில் ஏற்படும் அடைப்புகளை சரி செய்ய TATA ACE வாகனத்தில் Mount செய்து 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஓர் ஜெட் ராடிங் வாகனம் ஆகியவற்றை புதியதாக வாங்கவும், இதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.65.00 இலட்சத்தினை தூய்மை இந்தியா திட்டம் (SBM)- ன்கீழ் இந்நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட அரசினைக் கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு. | **தீர்மான எண்.43**<br>அனுமதி அளிக்கப்பட்டது. |

| வ. எண் | சராசரி அரையாண்டு வருமானம் ரூ. | 1.10.2013 முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தொழில்வரி ரூ. |
|---|---|---|
| 1 | ரூ.21000/– வரை | 35% |
| 2 | ரூ.21001/– முதல் 30000/– வரை | 189/– |
| 3 | ரூ.30001/– முதல் 45000/– வரை | 459/– |
| 4 | ரூ.45001/– முதல் 60000/– வரை | 891/– |
| 5 | ரூ.60001/– முதல் 75000/– வரை | 1250/– |
| 6 | ரூ.75001/– க்கு மேல் | 1250/– |

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**